## தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

( சுருக்கம் )

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் - தமிழ்நாடு மின்சார வாரியப் பணியாளர் சிறப்பு சேம நலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984 — திட்டத்தின் கீழ் வட்டி கணக்கிட்டு வழங்குவது — ஆணை வெளியிடப்படுகிறது.

---

**( செயலகக் கிளை )**

**(நிலை) த.நா.மி.உ.ம.ப.க. முழு வாரிய செயல்முறை ஆணை எண்.39, நாள் 06-07-2013.**

ஆனி-22,
திருவள்ளுவர் ஆண்டு-2044.

**படிக்கவும்:**

1. B.P.Ms.(FB) No.76 (SB), dated 31.08.1985.
2. அரசாணை எண்.61, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள் 28-02-2013.

******

**செயல்முறைகள்:**

தமிழக அரசின் ஆணையை பின்பற்றி, பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட வாரிய நிலையாணையின்படி, தமிழ்நாடு மின்சார வாரியப் பணியாளர் சிறப்பு சேம நலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984 என்ற திட்டம் 01-04-1984 முதல் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் (முன்னர் தமிழ்நாடு மின்சார வாரியம்) செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் விதி 5-ன்படி, இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வட்டித்தொகை அவ்வப்போது பொது வருங்கால வைப்பு நிதிக்கு வழங்கப்படும் வட்டியின் அடிப்படையில் கணக்கிடப்படும் என ஆணையிடப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக, பார்வை 2ல் படிக்கப்பட்ட அரசாணையின் வாயிலாக, இனி வருங்காலங்களிலும், ஓய்வு பெறும் அரசுப் பணியாளர்களுக்கு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேம நலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984-ன் கீழ் வழங்கப்படும் வட்டித் தொகையினை, அவ்வப்போது பொது வருங்கால வைப்பு நிதிக்கு தமிழக அரசால் வழங்கப்படும் வட்டி விகிதத்தின் அடிப்படையிலேயே கணக்கிட்டு வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வரசாணையைப் பின்பற்றுவது குறித்த ஒரு கருத்துரு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் வாரிய கூட்டத் தொடரில் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டு, உரிய பரிசீலனைக்குப் பின், அக்கருத்துரு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

<u>2.</u> அதன்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகப் பணியிலிருந்து ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு, தமிழ்நாடு மின்சார வாரியப் பணியாளர் சிறப்பு சேம நலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984-இன் கீழ் வழங்கப்படும் வட்டித் தொகையினை, அவ்வப்போது தமிழ்நாடு மின்சார வாரிய பொது வருங்கால வைப்பு நிதிக்கு வழங்கப்படும் வட்டி விகிதத்தின் அடிப்படையில் கணக்கிட்டு வழங்கிட, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் இதன் மூலம் ஆணையிடுகிறது.

<u>3.</u> இத்திட்டத்தின் கீழான பிற நிபந்தனைகள்/விதிமுறைகளில் மாற்றம் ஏதும் இல்லை.

<u>4.</u> இவ்வாணையை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை தவறாமல் இவ்வாணையுடன் இணைக்கப்பட்டுள்ள சீட்டில் அளிக்கவும்.

**( வாரிய ஆணைப்படி )**

**எஸ்.சின்னராஜுலு,**
**செயலர்.**